மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையம்
Mount Druitt Tamil Study Centre

Mobile: 0449 892 066 | Email :mtdruitttsc@gmail.com | Web : www.mtsc.org.au


பேச்சுப் போட்டி
2023

பேச்சுப் போட்டி குறிப்பின் ஒலி வடிவத்திற்கு இந்த விரைவு எதிர்வினைக் குறியீட்டை வருடுக :

(குறிப்பு : இது ஒரு வழிகாட்டல் மட்டுமே. மாணவர்கள் தங்களது சொந்த வசன நடையில் இதனை பயின்று மேடையில் பேசுவதற்கு பெற்றோர்கள் ஊக்கப்படுத்தவும்)

## ஆண்டு 8

அவையோர் அனைவருக்கும் அன்பு கலந்த வணக்கம்.
இன்றைய எனது உரைக்கான தலைப்பு

# தோல்வி தரும் பாடம்

தோல்வி நம் வாழ்க்கையின் ஓர் அங்கமே. தோல்வி என்பது ஒரு வாழ்க்கை நியதியும் கூட. வாழ்க்கையில் தோற்காமல் சாதனை படைத்தவர் எவருமில்லை. “நீங்கள் தோற்றால் உங்களால் வழிகாட்ட முடியும்” என்றார் விவேகானந்தர்.

தோல்வியின்றி ஒரு வரலாறா? விடுதலை வீரர்கள் சந்திக்காத படுதோல்விகளா? அனைத்தையும் எதிர்கொண்டு அவர்கள் ”தேசபிதா”க்களாக உருவெடுக்கவில்லையா? தேர்வில் தோற்றவர்கள் பிற்காலத்தில் மேதைகள் ஆகவில்லையா? தோல்வியை எப்படி எதிர்கொள்வது என்பதை வரலாற்றிலிருந்து கற்றுக் கொள்வோம்.

ஒவ்வொரு கண்டுபிடிப்பிற்கும் பின்னால் எத்தனையோ தோல்விகள்! தோமஸ் அல்வா எடிசன் சுமார் ஆயிரம் முயற்சிகளின் பின்னரே மின் குமிழினை கண்டுபிடித்தார். ஒவ்வொரு முறையும் முயற்சி தோல்வியுற்றபோது, அனுபவபாடங்களைப் படித்தேன் என்றாராம் எடிசன். இவ்வாறு சாதனையாளர்கள் தங்கள் தோல்விகளை எப்படி எடுத்துக் கொண்டார்கள் என பார்த்தீர்களா?

வெற்றிகள் மட்டும் நம் வாழ்க்கையல்ல. சில சமயங்களில் தோற்றுப் பாருங்கள், உங்களுக்கே புரியும் அவை தரும் பாடங்கள்!
துணிவு தானே துளிர்த்திடும் வெல்ல வேண்டும் என்ற வேட்கை பிறந்திடும் சிந்திக்கும் திறனும் சிறகடித்திடும் ஆற்றல் தானே அதிகரித்திடும் பலவீனம் தலை தெறிக்க ஓடிடும்.

முடிவாக, தோல்வி என்னும் படிக்கட்டுகளை மெல்ல கடந்துதான் வெற்றி என்னும் சிகரத்தை அடையமுடியும். எனவே தோல்விகளை ஏற்க பழகுவோம். ”தோல்விகள் என்பவை கற்றுக்கொள்வதற்கே, அஞ்சுவதற்கல்ல” என துணிவுடன் கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்




ஆக்கம் :
ஆசிரியர் திருமதி சாந்தினி ஜெயதேவன்
ஆசிரியர் திருமதி. கஸ்தூரிஹா ஸ்ரீகரன்